மாபெரும் திட்டங்கள் பட்ஜெட்டில் அறிவிப்பதோடு சரி; செயல்படுத்தப்படுவதில்லை!

# தமிழ்நாட்டிற்கு எந்த சிறப்பான திட்டமோ - நிதியோ ஒதுக்கீடு இல்லை!

## மக்களவையில் – ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் டி.ஆர்.பாலு உரை!

புதுடெல்லி, பிப்.13-

**நிதிநிலை அறிக்கை நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் விவாதத்துக்குப் பின் ஏற்கப்படுவது வழக்கமான நடைமுறை. அதன்படி, இந்த நிதிமசோதா 10.2.2026 அன்று மக்களவையில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது . திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கழகப் பொருளாளரும் மக்களவை திமுக குழுத் தலைவருமான டி. ஆர். பாலு பங்கேற்று நிதிநிலை அறிக்கை மீது நீண்ட உரையாற்றினார்.**

**தனது உரையில், நிதி நிலை அறிக்கையின் மேல் கடும் விமர்சனங்களை யும் பிரதமர் மோடி தலைமையிலான அரசின் திறனற்ற செயல்பாடுகளையும் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் போக்கையும் கண்டித்து பல்வேறு குற்றச்சாட்டுக்களை வீசினார்.**



டி.ஆர். பாலு உரையின் முழு விவரம் வருமாறு:-

அவைத் தலைவர் அவர்களே! நாடாளுமன்றத்தின் இந்த அவையில் இதற்கு முன் தமிழ்நாட்டைச் சேர்ந்த மேனாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் அவர்களைப் போல இந்நாள் நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களும் தொடர்ச்சியாக 9 முறை ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து சாதனை படைத்ததற்காக அவருக்கு முதற்கண் என் பாராட்டுதலைத் தெரிவிக்கிறேன்.

2047-ஆம் ஆண்டில் வளர்ந்த இந்தியாவை உருவாக்குவதுதான் தமது இலக்கு என நிதி அமைச்சர் சொல்கிறார். அதன் பொருட்டு, பட்ஜெட்டில் செயற்கை நுண்ணறிவு, பயோ பார்மா , செமி கண்டக்டர், அரிய தாதுக்கள் (கிரிடிகல் மினரல்ஸ்) போன்ற துறைகளுக்கு இந்தியா முன்னுரிமையும் முக்கியத்துவமும் அளித்துள்ளது. ஆனால், எழுகின்ற கேள்வி என்ன என்றால் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள் இவற்றுக்கான திட்டங்களை எந்த அளவுக்கு தொடர்ந்து திறம்பட செயல்படுத்துவார்கள் என்பது தான்.

### வருவாய் சார் செலவினக் குறைப்பு எப்படி முடியும்?

அரசின் உத்தி, வருவாய்சார் செலவைக் குறைத்து மூலதனச் செலவுகளைக் கூட்டுவது என்று நிதி அமைச்சர் கூறினார். கடந்த பத்து ஆண்டுகளில் வருவாய்சார் செலவுகள் 11 சதவீதம் குறைக்கப் பட்டதாக சொல்லப்படுகிறது. அதாவது, 2014-15 ல் 88 சதவீதமாக இருந்த இச்செலவினம் பத்து ஆண்டுகளுக்குப் பின் 2026-27-ஆம் ஆண்டில் 77 சதவீதமாக வீழ்ந்துள்ளது. அதன்னியில், இந்த வீழ்ச்சியில் மானியங்களுக்கான செலவுகளும் 7 சதவீதம் அடங்கும் எனவும் சொல்லப்படுகிறது.

ஆனால், உண்மை நிலவரம் என்ன? நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்யும் போது மானியங்களுக்கான செலவைக் குறைவாக காண்பிப்பதும் ஆறு மாதங்கள் கழித்து துணை மானியக் கோரிக்கை வாயிலாக கூடுதலாக நிதி கோருவதும் இந்த அரசின் வழக்கமாக ஆகிவிட்டது. இதைத் தான் அண்மையில் இந்த அவையில் 2025-26 க்கான துணை மானியக் கோரிக்கையின் மேல் பேசும்போது நான் குறிப்பிட்டேன். ஆறே மாதங்களில் உங்கள் வரவுசெலவு கணக்குகள் தாறுமாறாகப் போய் விடுகின்றன.

### நம்பகத்தன்மை இல்லை

இப்போது, நடப்பு நிதி ஆண்டின் இறுதிக் கட்டத்தில் வந்து அரசின் வருவாய் எதிர்பார்க்கப்பட்டதைக் காட்டிலும் ரூ.78,086 கோடி குறைந்து விட்டதாக நிதி அமைச்சரான தாங்கள் கூறுகிறீர்கள். நிதிசார் செலவு ஒரு லட்சத்து ஐநூற்று மூன்று கோடி ரூபாய் குறந்துவிட்டது என்றும் சொல்கிறீர்கள். அதைப் போல், மூலதனச் செலவுகளும் , 1 லட்சத்து 44 ஆயிரத்து 376 கோடி ரூபாய் அளவுக்கு மிகப்பெரிய குறைவை சந்தித்துள்ளன எனவும் தெரிவித்திருக்கிறீர்கள். இந்த நிலை, நம்பகத்தன்மை தந்திடும் என நம்புவதற்கில்லை.

### நடப்பு பட்ஜெட் திட்டங்களின் கதை என்ன?

2026-27-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கைக்கு நான் வருகிறேன். மதிப்பிடப் பட்டுள்ள மொத்த செலவுகள் ரூ.53.43 லட்சம் கோடிகள். சென்ற 2025-26 ஆண்டில் முதலில் இது ரூ.50.65 லட்சம் கோடி என்ற அளவில் கணிக்கப்பட்டது. எனவே, வரவுள்ள அடுத்த ஆண்டில் ரூ .3 லட்சம் கோடி கூடுதலாக தேவைப் படுகிறது என நிதி அமைச்சர் தெரிவிக்கிறார்.

மாபெரும் திட்டங்களை பட்ஜெட்டில் அறிவிப்பதை இந்த அரசு வழக்கமாகக் கொண்டுள்ளது. ஆனால் , விளைவு என்ன வென்றால பல மாதங்கள் சென்ற பிறகும் எவ்வித முன்னேற்றமும் இருப்பதில்லை என்பது தான் நிலை. சென்ற ஆகஸ்ட் 15 அன்று ,வேலைவாய்ப்புடன் இணைக்கப் பட்ட ஊக்கத்தொகைத் திட்டம் அறிவிக்கப்பட்டது. தொழிலாளர்களுக்கும் தொழிலகங்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் ஊக்கத் தொகை வழங்கப்படும் என்ற உறுதியுடன் திட்டம் துவங்கப் பட்டது. இதனால், 3 கோடியே 50 லட்சம் பேருக்கு கூடுதலாக வேலை வாய்ப்பு கிட்டும் எனவும் தெரிவிக்கப் பட்டது. திட்டத்தின் மொத்த செலவு ரூ.99,446 கோடி எனவும் கூறப்பட்டது. ஆனால், திட்டமோ இன்னும் செயல்பாட்டுக்கு வரவில்லை.

துவங்கா நிலையிலேயிலேயே இருக்கும் மற்றும் ஒரு திட்டம் தான், "ஆராய்ச்சி வளர்ச்சி மற்றும் புத்தாக்கம்" ( ரிசர்ச் டெவலப்மென்ட் மற்றும் இன்னோவேஷன் ' RDI )திட்டம். சென்ற 1.7.2025 அன்று ஆரம்பித்து வைக்கப் பட்ட இத்திட்டத்துக்கு ரூ.1 லட்சம் கோடி ஒதுக்கப் பட்டுள்ளதாகவும் நடப்பு 2025-26 நிதி நிலை அறிக்கையில் ரூ.20,000 கோடி தரப்பட்டுள்ளது எனவும் பட்ஜெட்டில் சொல்லப் பட்டது. ஆனால் இத்திட்டத்தை செயல்படுத்துவதிலும் முன்னேற்றம் எதுவும் இல்லை. மக்களவையில் இது தொடர்பான அமைச்சர்கள் அளித்த தகவல்கள் இந்த நிலையைக் காட்டுகிறது.

### வேளாண்துறை 1.1 சதவீதம் வீழ்ச்சி;

தமிழ்நாட்டில் தேங்காய் விளைச்சல் சம்பந்தமான பிரச்சினைகள் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அதிக அளவில் தேங்காய் விளைவிப்பதில் நாட்டில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தில் உள்ளது. நெல்லுக்கு அடுத்த நிலையில் தமிழ்நாட்டில் 12 லட்சம்ஏக்கர் நிலப்பரப்பில் தென்னை சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. பொள்ளாச்சி, பட்டுக்கோட்டை, திருச்சி மற்றும் திண்டுக்கல் பகுதிகள் அனறி, தமிழ்நாட்டின் தென் மாவட்டங்கள் அனைத்திலும் தென்னை வேளாண்மை பெரிய அளவில் உள்ளது. ஆண்டுக்கு ரூ.3500 கோடி என்ற அளவில் ஏற்றுமதிஆகும்விளைபொருளாக தேங்காய் உள்ளது. அண்மைக் காலமாக தென்னை மரங்களில் வேர் நோய் காரணமாக தேங்காய் உற்பத்தி கடுமையாக காரணமாக தேங்காய் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டது. அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால் இந்த நோய் பிரச்சனை இன்னமும் தொடர்கிறது.

நாட்டின் பொருளாதார ஆய்வு, சென்ற ஆண்டில் 4.4 சதவீதமாக இருந்த வேளாண்வளர்ச்சி நடப்பு ஆண்டில் 1.1 சதவீதம் குறைந்து, 3.5 சதவீதமாக குறைந்து விட்டதை சுட்டிக் காட்டுகிறது.

### கடும் ஊறு விளைவிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம்

அமெரிக்கா அறிவித்துள்ள வரி மற்றும் வர்த்தக ஒப்பந்தம் ,மடை திறந்த வெள்ளமாக அந்நாட்டின் வேளாண் பொருட்கள் இந்தியாவினுள் இறக்குமதி ஆகிட வழிகோலும். இது நமது வேளாண் பெருங்குடி மக்களுக்கும் வேளாண்மைத் துறைக்கும் மிகவும் தீங்கிழைத்து அழிக்கக் கூடியது. அதேசமயம், விலைமிக்க கோக்கோ, முந்திரி, சந்தனம், தேங்காய் போன்ற பொருட்களின் உற்பத்திக்கு சிறப்பு கவனமும் ஆதரவும் தரப்படும் என நிதி அமைச்சர் தனது நிதிநிலை அறிக்கை உரையில் உ றுதி அளித்துள்ளார். ஆனால், இதற்கான பட்ஜட் ஒதுக்கீடு எவ்வளவு என்று பார்த்தால் வெறும் 350 கோடி ரூபாய் மட்டுமே. எனவே, இது அரசின் வெற்று அறிவிப்புதானே தவிர வேறொன்றுமில்லை என நாட்டிலுள்ள விவசாயிகளின் அமைப்புகள் கண்டனம் செய்துள்ளன.

வாழைப் பயிருக்கும் இந்திய அரசின் சிறப்பு ஆதரவு தேவைப் படுகிறது. வாழை உற்பத்தியில் தமிழ்நாடு முதல் இடத்தில் இருக்கிறது. வாழை ஏற்றுமதி ஆண்டுக்கு ரூ.4000 கோடியாக உள்ளது. எனவே, வாழை விளைச்சலை அதிகரித்து ஏற்றுமதியை உயர்த்த மத்திய அரசு சிறப்பு கவனம் செலுத்தி ஆதரவு கொடுக்க வேண்டும்.

### தமிழ்நாடு புறக்கணிப்பு; பெருமை வாய்ந்த சேதுசமுத்திரத் திட்டம் முடக்கம்

ஆனால், ஒன்றிய அரசு , மாற்றாந்தாய் போல நடந்து கொண்டு தமிழ்நாட்டுக்கு வஞ்சம் இழைக்கிறது. தமிழ்நாட்டுக்காக எந்த சிறப்பான திட்டமோ நிதி ஒதுக்கீடோ இல்லை. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசால் செயல்படுத்தப் பட்ட சேதுசமுத்திர கப்பல் கால்வாய் போன்ற பெருமைக்குரிய திட்டங்கள் இந்த அரசில் அரசியல் காரணங்களால் தொடர்ந்து நிறைவேற்றப்படா மல் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

2004 முதல் 2014 வரை நடந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் பத்தாண்டு ஆட்சி தமிழ்நாட்டுக்கு 69 அரிய திட்டங்களை கொடுத்தது. தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து , சென்னை துறைமுகம் மதுரவாயல் இடையே 21 கி.மீ. உயர்மட்ட விரைவுப் பாலம் , ஜவுளித்துறை புத்துயிர் பெற்றிட சென்வாட் வரி ஒழிப்பு , திருவாரூரில் மத்தியப் பல்கலைக் கழகம், புதிய சேலம் இரயில் கோட்டம், திருச்சியில் ஐ.ஐ.எம். எனப்படும் இந்திய மேலாண்மையியல் உயர்கல்வி நிறுவனம், சென்னையில் இந்திய கடல்சார் பல்கலைக் கழகம் உள்ளிட்ட பல சிறப்புத் திட்டங்கள் இப்பட்டியலில் அடங்கும்.

இதற்கு மாறாக கடந்த 12 ஆண்டுகளில் தமிழகம் பெற்ற ஒரே ஒரு திட்டம் மதுரை எய்ம்ஸ் மட்டுமே. இந்த திட்டமும் இன்னும் கட்டுமான நிலையிலேயே உள்ளது. தமிழக முதல்வர் அவர்களும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் தமிழ்நாட்டுக்கு தீட்டமுதலீட்டில் 11 சதவீதம் வழங்கப்பட்டது எனச் சுட்டிக்காட்டியதை நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆனால் , இப்போது தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு என்றால் வெறும் பூஜ்யமே.

### மெட்ரோ ரயில், கல்விக்கு நிதி மறுப்பு

இந்திய அரசு தமிழக மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு நிதி தரவில்லை. சாமக்ர சிக்சா அபியான் கல்வித் திட்டத்துக்காக ஒதுக்கீடான நிதி ரூ.3548யும் விடு விக்கப்படவில்லை. ரூ.21,000 கோடி செலவில் அமைக்கப் பட உள்ள கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்ட அறிக்கைகள் மத்திய அரசினால் ஒப்புதல் மறுக்க ப் பட்டுள்ளன. அதேசயம், இவற்றை விட சிறிய நகரங்களான ஆக்ரா, புவனேஸ்வர், இந்தூர், நவிமும்பாய், ஆகிய வற்றின் மெட்ரோ திட்கங்களுக்கு ஒன்றிய அரசு அனுமதி வழங்கி உள்ளது. ஜல் ஜீவன் மிஷன் குடிநீர் திட்டத்திற்கு வர வேண்டிய ரூ.3112 கோடியும் விடுவிக்கப் படவில்லை. அது போல, திருவனந்தபுரம் கன்னியாகுமரி ரயில் பாதைக்கு நில எடுப்புக்குத் தேவைப்படும் தொகை ரூ.279 .73 கோடி வழங்கப்படவில்லை. மேலும், தமிழக ரயில்திட்டங்களுக்கு தேவையான 931 ஏக்கர் நிலத்துக்கான நிதியும் தரப் படவில்லை.

இதுமட்டுமல்ல. ஒன்றிய அரசின் பிரித்தளிக்கக் கூடிய வரிவசூல் தொகுப்பில்( Divisible Pool) இருந்து மாநிலங்களுக்கு 50 விழுக்காடு அளவுக்கு நிதி பகிர்ந்தளிக்கப் பட வேண்டும் என்று முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தினார். ஆனால், ஏற்கனவே இருப்பது போல் 41 விழுக்காடு அளவில் தான் வரிவசூல் நிதிப் பகிர்வு இருக்கும் என ஒன்றிய அரசு அறிவித்துள்ளது.

### செஸ், சர்சார்ஜ் மேல் வரிகளை அகற்றுக!

செஸ், சர்சார்ஜ் போன்ற பகிர்ந்தளிக்கத் தேவையில்லாத மேல் வரிகளை விதிக்கும் ஒன்றிய அரசின் கூட்டாட்சிக்கு எதிரான, மாநிலங்களைச் சுரண்டும் செயல்பாடுகள் எல்லாம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு இத்தகைய வரியினங்கள் அனைத்தும் ஒன்றியத்தின் பகிர்ந்தளிக்கக் கூடிய வரித்தொகுப்பின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

### பிரதமர் மோடியின் வாக்குறுதிகளுக்கு என்ன நேர்ந்தது?

இரண்டு கோடி பேருக்கு வேலை, குடும்பத்துக்கு 15 லட்சம் ரூபாய் உள்ளிட்ட பிரதமர் மோடியின் வாக்குறுதிகள் என்ன வாயின? எவருக்கும் தெரியவில்லை. இந்தக் கேள்விகளுக்கு, கடந்த பத்து ஆண்டுகளாக, அரசின் பிரதிநிதியாக உள்ளவர்கள் எல்லாம் உணர்வற்று, சத்தமின்றிக் கிடக்கின்றனர். ஒவ்வொரு தேர்தலுக்கும் முழக்கமாகிப் போய்விட்ட, டாக்டர் எம் .எஸ். சாமிநாதன் பரிந்துரையை , அதிகம் பேசப்பட்ட குறைந்த பட்ச ஆதார விலை கூட இன்னமும் செயல்படுத்தப்பட்டபாடில்லை.

நாட்டின் தொழில்துறையோர், வணிகப் பெருமக்கள், நடுத்தர மக்கள், ஏழை எளிய சாதாரணக் குடிமக்கள் என அனைவரும் பொதுமக்களுக்கு எந்த வித நன்மையும் பயக்காத இந்த பட்ஜெட் திருப்தி அளிக்காத பட்ஜெட் என்ற உணர்வை வெளிப்படுத்தி இருப்பதுடன் இது வெற்று முழக்கங்களிடும் ஒரு அரசின் வாய்ப்பந்தல் ; வேறெதுவும் இல்லை என முத்திரை குத்தி விட்டனர்.

எனவே, எனது பேச்சை நிறைவு செய்யும் முன் இறுதியாக ஒன்றே ஒன்றை மட்டுமே வினவ விரும்புகிறேன். "ஜெட்" வேகத்தில் கீழே வீழ்ந்து வரும் டாலருக்கு நேரான ரூபாயின் மதிப்பை எப்படி நீங்கள் தடுத்து நிறுத்தப் போகிறீர்கள்? ஏற்கனவே, டாலரின் மதிப்பு 92 ரூபாய் என்ற நிலையில் உள்ளது.

நமது பிரதமர் அவர்களோ இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க பட்ஜெட் என சிலாகித்துள்ளார். தமிழில் பழமொழி ஒன்று உள்ளது. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு என்பதுதான் அது. ஆங்கிலத்தில் சொன்னால், " Even For A Crow ,Its Offspring is golden "

மிக்க நன்றி."

இவ்வாறு தி.மு.க. மக்களவைக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு ஒன்றிய நிதிநிலை அறிக்கை மீது மக்களவையில் நடந்த விவாதத்தில் பங்கேற்று தனது கடுமையான விமர்சனக் கணைகளை ஏவினார்.

---

தமிழ்நாடு வெல்லட்டும்! வெல்வோம் ஒன்றாக!

# தமிழ்நாடு VS என்.டி.ஏ. எனும் ஜனநாயகப் போரில் தமிழ்நாடு தலைகுனியாது!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் சூளுரை!

சென்னை, பிப்.13-

தமிழ்நாடு VS என்.டி.ஏ. எனும் ஜனநாயகப் போரில் தமிழ்நாடு தலைகுனியாது. தமிழ்நாடு வெல்லட்டும்! வெல்வோம் ஒன்றாக என்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் சூளுரைத்துள்ளார்.

இது குறித்து நேற்று (12-02-2026), கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

**"பட்ஜெட்டில் "ஜீரோ" கொடுத்தால் கைகட்டி வேடிக்கை பார்ப்போம் என்று நினைத்தார்களா?**

**தமிழ்நாட்டுக்கு வஞ்சனை செய்வதை மட்டுமே எண்ணமாகக் கொண்டு செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து, ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களில் திரண்டு தமிழ்நாட்டு மக்களின் குரலாகக் கேள்வி கேட்டுள்ளது மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி!**

**தமிழ்நாட்டுக்கான நிதிகளை மறுத்து அநீதியை இழைக்கும் NDA கூட்டணிக்கு "ஜீரோ"வைத் திருப்பியளிப்போம்!**

**#TamilNaduVsNDA எனும் இந்த ஜனநாயகப் போரில் # தமிழ்நாடு_தலைகுனியாது! தமிழ்நாடு வெல்லட்டும்! #வெல்வோம்_ஒன்றாக!"**

இவ்வாறு முதல்வர் அவர்கள் வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---


தி.மு.க. சட்டத்துறையால் நியமிக்கப்பட்ட

# தி.மு.க. சட்டத்துறை மாநில நிர்வாகிகள், மண்டலப் பொறுப்பாளர்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (DLC) - சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் (CLC-2) - மாவட்ட கண்காணிப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி. அறிவிப்பு!

தி.மு.க. சட்டத்துறை மாநில நிர்வாகிகள், மண்டலப் பொறுப்பாளர்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (DLC) - சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் (CLC-2) - மாவட்ட கண்காணிப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நாளை 14-02-2026 சனிக்கிழமை காலை 10.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் சட்டத்துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை அவர்கள் தலைமையில், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் சிறப்புரையாற்றிட கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள் - துணைச் செயலாளர்கள் - தலைமைக் கழக வழக்கறிஞர்கள் ஆகியோர் கலந்து கொள்ள நடைபெறும்.

இக்கூட்டத்தில் தி.மு.க. சட்டத்துறையால் நியமிக்கப்பட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (DLC) - சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் இருவர் (CLC-2) - மாவட்ட கண்காணிப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : SIR குறித்து

**என்.ஆர்.இளங்கோ, எம்.பி.,**
செயலாளர்,
தி.மு.க. சட்டத்துறை

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 18


---


# காஞ்சிபுரம் தெற்கு மாட்ட தி.மு.க.செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் அறிவிப்பு!



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் சித்தாமூர் ஒன்றியம், பேரம்பாக்கம் உதயநிதி ஸ்டாலின் திடலில் வருகிற 18.02.2026 - புதன்கிழமை அன்று பிற்பகல் 12 மணி அளவில் மாவட்டக் கழக அவைத் தலைவர் ச.இனியரசு தலைமையிலும், மாவட்ட துணைச் செயலாளர்கள் ஒ.எஸ்.தினகரன், க.செல்வம் எம்.பி., கு.மலர்விழி, மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

எனவே, இக் கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர - நகர - ஒன்றிய - பகுதி - பேரூர் செயலாளர்கள் - கழக அணிகளின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும் படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1) வெல்லும் தமிழ்ப் பெண்கள் பூத் வாரியாக மகளிர் தேர்தல் பரப்புரை
2) 2026 சட்டமன்றத் தேர்தல் பணி
3) கழக ஆக்கப் பணிகள்

**க.சுந்தர் எம்.எல்.ஏ.**
செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.


---



சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் மேற்கு பகுதி 54 ஆ வட்டத்தில் வுட் வார்ப் ரயில்வே கேட் பகுதியில் மகளிர் சுய உதவிக் குழுத் தலைவர் அலமேலு தலைமையில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர் பாபு கலந்து கொண்டு 17 மகளிர் சுய உதவி குழுக்களை சார்ந்த பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பித்தார். விழாவில் மேயர் பிரியா ராஜன், பகுதி கழகச் செயலாளர் எஸ்.முரளி, மண்டல குழு தலைவர் பி.ஸ்ரீராமுலு, வட்டக் கழக செயலாளர் பா கதிரவன் ஜி.ராமமூர்த்தி மற்றும் மகளிர் சுய உதவி குழுக்களை சார்ந்த பெண்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.